செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவ

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு ஐப்பசி மீ உ0 உ வெள்ளிக்கிழமை (6-11-1970) [இல- டுக

## சிவஞானபோதம் ஒரு வீட்டு நூல்

[யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 30-10-70-இல் அன்று மெய்கண்டதேவநாயனுர் குருபூசை கொண்டாடப்பெற்றபோது தலைமை வகித்த சைவப்புலவர்மணி திரு த. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் தலைமையுரையின் சாரம் வருமாறு.]

"மெய்கண்ட தேவர் என்பதன் பொருள் உண்மையையுணர்ந்தவர் என்பதாகும். சிவபெருமான் அநாதிமலமுத்தர். ஆன்மா அநாதி மலபெத்தன். சிவபெருமான் இயல்பாக பாசங்களில்லாதவர். ஆன்மா அநாதியிலேயே பாசத்தினுல்கட்டுப்பெற்றது. எங்ஙனம் ஒரு பசுவை நாம ஒரு கயிற்றிலே கட்டுகின்றோமோ அதேபோல ஆன்மாவானது பாசத்தினுலே கட்டுப்பெற்றது. 'பச்' என்ற வடமொழியின் பொருள் கட்டுதல் என்பதாகும். ஆகையினுல் ஆன்மாவிற்கு 'பசு' என்ற பெயர் வழங்குகின்றது. இவ்விதமாகப் பாசத்தினுல் கட்டுப்பட்ட ஆன்மாவை விடுதலை செய்யவேண்டுமென்ற கருணையையுடையவர் சிவபெருமான். அந்தக் கருணையே அவருடைய சத்தியாகும். ஆன்மா பாசத்தினின்றும் விடுதலை பெற்று இறைவன் தாளையடைகின்ற வழியைச் சுருக்கமாகக் கூறுகின்ற நூலே சிவஞானபோதம். அது ஒரு வீட்டு நூல். பரந்த பொருளைச் சுருக்கமான முறையில் மெய்கண்டதேவர் கூறுகின்றனர். அது அவருடைய தவத்தின் பெருமையால் கிட்டியதாகும். இறைவனை அவனுடைய அருளைப் பெற்றவர்களே உணர முடியும்.

"அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்றனர் மணிவாசகப் பெருமான்.

"அவனருளே கண்ணுகக் காணினல்லால்" என்றனர் அப்பர் சுவாமிகள்.

"எங்ஙனம் திருமுறைகளுக்கு முதல்வராக திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அமைந்தாரோ அவ்விதம் சித்தாந்த சாத்திரத்திற்கு மெய்கண்ட தேவநாயனுர் முதல்வராக அமைந்தனர். திருமுறைகள் தோத்திரம், சித்தாந்த சாத்திரம் அவற்றின் இலக்கணம். அருணந்தி சிவாசாரியர் மெய்கண்டதேவநாயனுருடைய குல குரு. அவர் சகலாகம பண்டிதர். அவருடைய காலத்தில் 28 ஆகமங்களுமிருந்தன. அவற்றையெல்லாம நன்கு கற்றவர். அங்ஙனம் கற்றிருந்தும் மெய்ஞ்ஞானம் கிட்டவில்லை. குருவில்லாமல் ஞானம் சித்திக்காது. மெய்கண்ட தேவநாயனுரே குருவாக அமைந்தனர்.

'ஆணவம் எத்தன்மைத்து' என அருணந்தி சிவாசாரியார்கேட்டவினுவே அவருக்கு மெய்ஞ்ஞானம் கிடைக்க வழிகோலியது. மெய்கண்டதேவ நாயனுர் தமது சுட்டுவிரலினுல் ஆணவத்தின் தன்மையை விளக்கினுர். உடனே அருணந்தி சிவாசாரியார் தம்முடைய மரபு வயது கல்வி முதலியவற்றை மதிக்காது அக்குழந்தையைக் குருவாகக் கொண்டார். அன்புநெறியை வளர்ப்பதே சைவ நூல்களின் குறிக்கோள். அன்புநெறியே இறைவனை அடையும் மார்க்கம்' இவ்வாறு பண்டிதை ச. அமிர்தாம்பிகை B. A. 'மெய்கண்டார்' என்னும் பொருள் பற்றிப் பேசிய போது குறிப்பிட்டார்.

"உலகிலுள்ள சேதனப்பொருள். அது சேதனப் பொருளாகிய இரு கூற்றுப் பிரபஞ்சங்களையும் அவன் அவள், அது' என்னும் மூன்று பெயர்ச் சொற்களுக்குள் அடக்கிவிட்டார் மெய்கண்டதேவர்.

இவ்வுலகம் தோன்றி நிலைபெற்று ஒடுங்குகின்றது. அவ்விதமான முத்தொழிலுஞ் செய்கின்றதற்குக் கருத்தா ஒருவன் உண்டு. அவன் சங்காரகாரணன். அச் சங்காரகர்த்தாவினுலே உலகம் ஒடுங்கித் தோன்றுவதினுலே அவனே முதற் கடவுள்" இவ்வாறு திரு. S. A. பொன்னம்பலம் B. A, சிவஞானபோதம் முதற்சூத்திரத்தைப் பற்றி உரையாற்றினர் கூட்டத் தொடக்கத்தில் ஸ்ரீமதி கலியாணசுந்தரக் குருக்கள் தமிழ்மறை யோதினுர்

சமயப்பிரசார அமைச்சர் மூ. மயில்வாகனம் யாவருக்கும் நன்றி கூறினுர்.

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பட்ட நெற்றியர் பாய்புலித்
தோலினர்
நட்ட நின்று நவில்பவர்
நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ்
சேரியெம்
வட்ட வார்சடையார்வண்ணம்
வாழ்த்துமே

திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

---

இலங்கைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோவில்

5—11—70 வியாழக்கிழமை ஷெ கோவிலில் திருக்கலியாண வைபவம் நிகழும். காலை 8 மணி முதல் 11-30 மணிவரை விசேஷ அபிஷேகஆராதனைகளும், மாலை 4-30 மணி முதல் இரவு 7 மணி வரை திருக்கலியாண உற்சவமும் நடைபெறும்

---

## கல்வியின் அடிப்படை உரிமை

பரமேஸ்வராக் கல்லூரி பொன்விழாவிலன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந சபாரெத்தினம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்:-

நமது நாட்டில் பிறப்பையொட்டி உரிமைகள் வழங்கும் முறை சிறிதளவு இன்னும் காணப்படுகின்றது. அது பண்டைய பிரபுத்துவ முறையினதும் குடியேற்ற நாட்டு அரசியல் முறையினதும் வழக்கத்தைச் சார்ந்ததாகும். தற்பொழுதும் தகுதியை நோக்காது பதவிகள் வழங்கும் முறை சில இடங்களிற் காணப்படுகிறது உயர்ந்த சாதி அல்லது பணம் அல்லது அதிகாரம் படைத்தவர்கள் பொறுப்பில் அரசாங்கம் இருந்தால் கருமங்களைச் சிறப்பாக நிர்வகிக்க முடியாது. அதிகார வர்க்கத்தையோ அல்லது உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களையோ கல்வியின் நலன் அடைந்து விட்டால் நாட்டில் ஜனநாயகம் பேச்சுச் சுதந்திரம் பாதிக்கப்படும். விவேகம்சிந்திக்கும் ஆற்றல், நடுவுநிலைமை முதலிய ஆற்றல்கள் படைத்தவர்கள் தான் அரசகருமங்களைத் திறமையாக நடாத்துவார்கள். எங்கள் கல்விச்சாலைகள் அத்தகைய ஆற்றல்கள் படைத்த ஆடவர்களையும் பெண்களையும். உற்பத்தி செய்தல் வேண்டும். மக்கள் செழிப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு விவசாயம், வணிகம், அரசியல் முதலியவற்றில் யாவரும் சமஉரிமை பெறக்கூடிய கல்விஊட்டப்படல்வேண்டும் எங்ஙனம் வாக்குரிமை யாவர்க்கும் பொதுவாக இருக்கிறதோ அங்ஙனம் கல்விபெறும் முறையும் யாவர்க்கும் சமமாகவிருத்தல் வேண்டும்.

வேறுபட்ட ஆற்றல்கள்:

யாவருக்கும் ஒரேவிதமான கல்வியை ஊட்டுவதில் ஒரு பயனுமில்லை. காரணம் மனிதன் வெவ்வேறு ஆற்றல் படைத்தவனுகவிருக்கிறுன். ஆகையினுல் சமவாய்ப்பு மக்களுக்கு ஒரு துறையிலல்ல பல துறைகளிலும் வழங்கப்படுதல் வேண்டும். ஒரு குழந்தையினுடைய சாதி, பணம், இனம், பால் முதலிய பேதங்களை நோக்காது ஒரு குழந்தைக்குப் பயனுள்ள கல்வி ஊட்டல் வேண்டும். கல்வியின் முடிவில் குழந்தைகள் பல துறைகளில் தொண்டாற்றலாம். ஆனுல் சமூகத்தில் அவர்கள் சம உரிமையடைந்தவர்களாகத் திகழ்தல் வேண்டும். யாவரும் கல்விகற்ருல் கல்வியின்தரம் குறையுமென்று வாதிக்கின்றவர்கள் தற்பொழுதும் இந்த நாட்டில் உண்டு. இலவசக் கல்வியை இக் காரணங்கொண்டு கண்டிக்கின்ற சில மக்களும் பத்திரிகைகளும் இக் காலமும் உண்டு.

சமூகவாய்ப்பு என்பதை இன்னும் ஆராய்வோம.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலே சேரும்பொழுது யாவ

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

---

## முருகக்கடவுள் வழிபாடு

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர். பருத்தித்துறை.

முன்வளர்ச்சி – 2.

இலங்கையின் தென்கிழக்குக் கரையை அடுத்து கதிர்காமம் என்று சொல்லப்படும் ஓர் கிராமம் உண்டு அது கரடிகளும், யானைகளும், புலிகளும் சஞ்சரிக்கின்ற ஒரு காட்டின் நடுவிலிருக்கிறது. அதுவுமன்றி விரைவில்மரணத்தைதரும் காட்டுக்காய்ச்சல் (மலேரியா) வருதற்கு பீடமாயுள்ளது. அம்பாந்தோட்டையிலிருந்து 29 மைலும், வதுளையிலிருந்து 87 மைலும், கிட்டிய திசைமகாரும என்னும தபால் நிலைய பட்டினத்திலிருந்து 10½ மைல் தூரத்திலும் இருக்கிறது. வதுளையிலிருந்து 13 மைல் தூரத்திலுள்ள மௌசகுல தோட்டத்திலிருந்து உற்பத்தியாகியோடுகின்ற மாணிக்க கங்கையின் இடது கரையில் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்கு முன் 3- ஆம் நூற்றுண்டில் இத்தலம் மேன்மையாக மதிக்கப்பட்டிருந்தது. கௌதம புத்தர் தியானஞ் செய்துகொண்டிருந்த 16 இடங்களில் இதுவும் ஒன்ருகும் கதிர்காமத்திலிருந்த பிரபுக்கள் சங்கமித்தா இந்தியாவிலிருந்து கொண்டுவந்த அரச மரத்தை நல்வரவேற்று உபசரித்தார்கள். கதிர்காமத்திலும் அதில் ஒரு கிளைக் கன்று நாட்டப்பெற்றது. அது பெரு மரமாகி இன்றும் வீதியில் காணக்கூடியதாக நிற்கிறது. புத்த கோயிலாகிய கிரிவிகாரை. பிரதான கோயிலிலிருந்து 1/3 மைல தூரத்திலிருக்கிறது. அது மஹாநக அரசனல் கி. மு. 300-ல் கட்டப்பட்டது. கதிர்காமம் தெய்வீக மேன்மையும் அருளுமுடைய ஒரு நகரம். கதிர் = சோதி; ஒளி. காமம் = அன்பு அருள், கிராமம். கார்த்திகேயர்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

---

மூத்தவிநாயகர் பண்டசாலை

நல்லூர் மூத்தவிநாயகர் ஐக்கிய பண்டசாலைச்சங்கத்தின் 17 ஆவது வருடாந்தப்பொதுக்கூட்டம் ஷெ சங்க முன்றலில் 6-11-70 பி. ப 5-00 மணிக்கு நிகழவிருக்கிறது.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞு ஐப்பசி மீ உ0-உ வெள்ளிக்கிழமை [1970

## மக்களும் வரவு செலவுத் திட்டமும்

ஐக்கிய முன்னணி நிதியமைச்சர் தமது வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொது மக்களை சிக்கனமாக வாழ்ந்து நாட்டின் பொருள் நெருக்கடியைத் தீர்த்து வைக்க உதவும் வண்ணம் கேட்டுக்கொண்டார். வரவு செலவுத் திட்டத்தில் 168 கோடியே 21 இலட்சம் பற்ருக குறை காணப்படுகின்றது. அக் குறையை நீக்குவதற்காக ஆடம்பரப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. வருமானவரிக்குத் தப்புவதற்காக பதுக்கல் செய்துள்ளவர்களதும், வியாபாரிகளதும் நிதியை பொது நலனுக்குப் பயன்படக் கூடியவகையில் வெளிவரச் செய்வதற்காக பழைய 100 ரூபா நோட்டுக்களும், 50 ரூபா நோட்டுக்களும் செல்லுப்படியாகாதெனப் பிரகடனஞ் செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் புது 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்கள் அச்சிட்டு தேவைக்கு வெளிவந்துள்ளன. அரசாங்கத்தினுடைய நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு பதுக்கல்காரரினதும், வியாபாரிகளினதும் பணத்தை வெளிவரச்செய்து வரிவிதிப்பது தகுதியான செயலே

ஆனுல், இவ்விதமான நடவடிக்கையினுல் பொது மக்கள் பாதிக்கப்படாமலிருப்பதை அரசாங்கம் கவனித்தல் வேண்டும். 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றும் வகையில் பொது மக்கள் கியூ வரிசையில் நின்று வெயிலாலும், பனியாலும், பகலும் இரவும் பசியுடனும், தாகத்துடனும் காத்திருக்கும் பரிதாபத்தை நீக்கக்கூடிய வழிவகைகளை அரசாங்கம் கையாண்டிருத்தல் வேண்டும். பழைய 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்குக கூடிய காலம் வழங்கியிருத்தல் வேண்டும். பணத்தை மாற்றுவதற்கு கிராமங்களில் வசதிகள் செய்திருத்தல் வேண்டும். இந் நெருக்கடியினுல் மக்கள் தங்கள் தீபாவளியை வழமைபோல குதூகுலத்துடன் கொண்டாட முடியவில்லை.

புத்தக இறக்குமதிக்கு பீக்ஸ் கட்டண நீக்கம், தொழிலாளர் சேமலாபநிதி வட்டியதிகரிப்பு, ஆடம்பரப் பொருட்களின் விலையதிகரிப்பு நியாயமானவையே. வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தியதிகாரம் கவனிக்கப்படவில்லை. காங்கேசன்துறை அபிவிருத்தி, அச்சுவேலித் தொழிற்சாலை போன்றவை கவனிக்கப்படவில்லை. பெற்ரேலின் விலையதிகரிப்பினுல் கார்க் கூலிகளும், லொறிக் கூலிகளும் கூடும் இவற்றினுல் பொது மக்களுடைய தினசரி உழைப்புப் பாதிக்கப்பெறும்.

நிதியமைச்சர் சிக்கனமான வாழ்க்கையை வற்புறுத்தியமை விரும்பத்தக்கதே. அவருடைய வேண்டுகோளுக்கு அரசாங்க உத்தியோகத்தர், மந்திரிமார் உட்பட யாவரும் செவிசாய்த்தல் நன்மையளிக்கும்.

## கல்வியின் அடிப்படை உரிமை

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

ரும் சமஆற்றலுடையவர்களாயிருக்கின்ருர்களா பிறக்கும்பொழுது சமமான பண்புகள் உடையவர்களாக இருக்கின்ருர்களா? இல்லை ஆகையினுல் ஆசிரியர்களோ அல்லது அரசாங்கமோ ஒரு பிள்ளையினுடைய பாரம்பரியத்தைக் கட்டுப்படுத்த முடியாது. பிள்ளைகள் பிறக்கும்பொழுதே வித்தியாசமான ஆற்றல்களும் பண்புகளும் உடையவராயிருக்கின்றனர். பிள்ளைகள் பிறந்த பின்பு வளரும் சூழ்நிலைகளும் வித்தியாசமானவை. சிலர் வறிய குடிசையில் வாழ்கின்ருர்கள். சிலர் மாடமாளிகைகளில் வாழ் [illegible] சிலர் நல்ல பண்புள்ள மக்கள் உள்ள சூழ் நிலையில் வாழ்கின்ருர்கள். சிலர் நல்லொழுக்கமில்லாத குடும்பங்களில் வாழ்கின்ருர்கள் சிலர் கந்தை அணிகின்ருர்கள், சிலர் விலையுயர்ந்த ஆடைகள் அணிகின்ருர்கள். இவ்விதமாக அவர்கள் பொருள் படைத்தவர்களாகவும் பொருள் அற்றவர்களாகவும் இருக்கக் காண்கிருேம்.

ஒரு குழந்தையினுடைய பாரம்பரியமான குணங்களை மாற்றமுடியாது. சூழ்நிலைகளால் ஏற்பட்ட குறைகளை ஒரளவிற்கு நீக்கலாம். சூழ்நிலைகளைத் திருத்துவதினுல் பூரணசித்தி உண்டாகும் என்று கருதவும் இடமில்லை. ஒரு பூரணமான சூழ்நிலை[illegible]

நாம் உண்டாக்கினுல் ஒரு குழந்தை ஒரு சேக்ஸ்பியராகவோ ஒரு ராமனுஜனுகவோ அல்லது ஒரு இராமநாதனுகவோ வரப் போவதில்லை. குழந்தைகள் வாழ்கின்ற இல்லங்களிலோ அல்லது பாடசாலைகளிலோ நல்ல சூழ்நிலையை நாம ஏற்படுத்தினுல் அவர்கள் தமது இயல்புக்கேற்ற நன்மையைப் பெறுவார்கள். ஒரு பாடசாலையின் திறமை உயர்தரப் படிப்பில் மாத்திரம் தங்கி இருக்கவில்லை கைத்தொழில், சித்திரம், இசை, உடற் பயிற்சி முதலிய துறைகளிலும் முன்னேற்றம் அடைந்தால் தான் பாடசாலைகள் முதன்மை வாய்ந்தனவாக இருக்கும். இந்த உண்மையை அறியாத பெற்ருேர்கள் தம் பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வியை ஊட்டுவதிலேயே பெரிதும் ஆர்வம் காட்டுகிருர்கள். ஒரே விதமான பொருட்களை உண்டுபண்ணும் தொழிற்சாலையென பாடசாலையை எண்ணுகின்ருர்கள்.

பிள்ளைகள் வெவ்வேறு விதமான ஆற்றல்கள்படைத்தவர்கள். வித்தியாசமான இலட்சியங்களும் அபிப்பிராயங்களும் உடையவர்கள் என்பதை ஆசிரியர்கள் முதற்கண் உணருதல் வேண்டும். அவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்றவாறு கல்வியூட்டப்படல் வேண்டும். அப்பொழுது அவ்வித்தியாசாலையில் இருந்து சிறந்த வைத்தியர்கள், பொறியியலாளர், இசைவல்லுனர், கைத்தொழில் விற்பன்னாகள் வெளிவருவார்கள்.

ஆசிரியர்கள் பெற்ருேருடன் தொடர்பு கொள்ளுதல் மூலம் மாணவர்களின் எதிர்கால நன்மைக்கு வழிதேடலாம்.

## கந்தபுராணம் சைவபோக்கிஷம்

"புராணங்களுக்குள்ளே சிறந்தது கந்தபுராணம் கந்தபுராணத்தை விதிப்படி ஓதினுல், கேட்டால் பெரும் பயன்விளையுமென்று நமது நாவலர்பெருமான் கூறினர். நாவலர்பெருமான் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலே புராணபடனத்தை நடாத்தி வைத்தார்கள். இன்று; பிரசித்தி வாய்ந்த நல்லூரிலே நாவலர் மணிமண்டபத்திலே கந்தசஷ்டி விழாவினை முன்னிட்டு, கந்தபுராண படனம் நடத்துவது மிகவும் பொருத்தமானது. கந்தபுராணம் சைவ போக்கிஷமாகும்"

சென்ற சனிக்கிழமை பிற்பகல் நாவலர் மணிமண்டபத்தில் கந்தபுராண படனத்தைத்தொடக்கி வைத்த வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கனிட்ட அதிபர் பண்டிதர் இ. நவரத்தினக்குருக்கள் "திகடசக்கரச் செம்முகமைந்துளான்" என்று தொடங்கும் காப்புப் பாடலை விதிப்படி ஓதிப் புராண படனத்தை ஆரம்பித்து வைத்ததுடன் பயனும் உரைத்தார்.

புராண படனத்தில் ஆசிரியர் திரு வி செல்லத்துரை, நாவலர் மகாவித்தியாலய ஆசிரியர் சேந்தன் சி. கார்த்திகேசு உட்பட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷை மண்டபத்தில் திருமுறை யோதலும் தினமும் நடைபெறுகின்றது.

## முருகக் கடவுள் வழிபாடு

[1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

கிராமம் என்பது. கதிர்காமம் எனச் சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது. சோதிஷ் காமம் எனவும் சொல்லப்படும். குருமார் (பூசாரியர்கள்) தீர்க்கமான கிரியைகளுடன் வழிபடுகிருர்கள். பட்டிக்காட்டான் இறைச்சியும் இரத்தமும் நிவேதனமாகக் காட்டி வணங்குகிருன். ஆதி காலத்து வேடன் பூர்வ வழக்கப்படி நடனஞ் செய்து, பிரார்த்தனை செய்து கொள்ளுகிருன். தத்துவ ஞானியானவன் மவுனமாய்த் தியானத்திலிருந்து சர்வ லோகங்களிலும் வியாபித்திருக்கிருர் முழுமுழு முதற் கடவுள் – சுப்பிரமணியர் என்றும் எல்லாம் அவரிலிருந்தே தோன்றிப் பின் ஒடுங்குகின்றன, என்றும், அவர், மன்பதைமாட்டு வைத்த பெருங் கருணையினுலே அவர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு இளைய ஞான பாலகனுகவும் - கொடிய அசுரராதிகளை அழிக்கும்பொருட்டு போர்க் கடவுளாகவும், என்றும் அழகிய குழந்தை வடிவாகவும் - தம்மை வழிபடும் அடியார்களுக்கு எப்பொழுதும் எங்கும் அருளும் நோக்கத்துடனும் எழுந்தருளுகின்ருர்

"அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ் சமரந் தோன்றில் வேல் தோன்றும்
நெஞ்சில், ஒருகால் நினைக்கின்
இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்".

ஒரு முருகாவென்று என் உள்ளங்குளிர உவந்துடனே
வருமுருகா வென்று வாய் வெருவாநிற்பக் கையிங்ஙனே
தருமுருகா வென்றுதான் புலம்பா நிற்ப தையல்முன்னே
திருமுருகாற்றுப்படையுடனே வருஞ் சேவகனே.

ஒப்பற்ற முருகக் கடவுளே என்று என் மனதில் அவரை நினைக்க எனது உள்ளம் குளிர்ச்சியடைகின்றது. மகிழ்ச்சி கொண்டு வருகின்ற முருகனே என்று சொல்ல வாய் துடிக்கின்றது. உமது அருளாகிய கையினுல் உதவி செய்யும் முருகனே என்று கண்ணீர் சொரிந்தழ - தையல் முன்னே ஆற்றுப் படையோடு வந்த வீரரே

5ம் நூற்ருண்டில்; சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்ட வீரகாவியமாகிய கந்தபுராணம், 8ம் நூற்ருண்டில் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் சுத்த செந்தமிழில் மொழிபெயர்த்தெழுதப்பட்டது. சம்ஸ்கிருத பாஷையிலுள்ள சங்கர மஹாத்மியத்தின் 12 பிரிவுகளில், முதலாம் பிரிவாகிய சிவரகசிய காண்டத்தின் முதலாறு காண்டங்களையும் கச்சியப்பர் யாவரும் விளங்கக கூடிய இலேசான நடையில் மொழி பெயர்த்தருளினுர்.

அதிதூரத்திலுள்ள வடகயிலையில் முருகக்கடவுள் உற்பத்தியுடையராயினும் தெற்கே வந்திருக்கத் தொடங்கி, 20ம் நூற்ருண்டுகளுக்கு மேலாகின்றது. அப்பெருமானை வழிபாடு செய்கிறவர்கள் பிரதானமாய்த் தமிழர்களே. முதன் முதல் தமிழர்களின் ஆதித் தெய்வம் முருகக் கடவுளே. அவர் வடக்கிலிருந்து தென்தேச நடைவந்த பொழுது அவருடன் கூட தமிழர்களும் வடக்கேயே இருந்து வந்தவர்களாக எண்ணப்படுகிருர்கள். பல நூற்ருண்டுகளாக முருகக் கடவுள் வணக்கம், வட இந்தியாவில் ஆரியர்களாலும, சிறீயர்களாலும், (Scythians மங்கோலியர்களாலும் (Mongolias), ஹூன்ஸ் (Huns) சாதியார்களாலும், திராவிடர்களுக்குப் பின்வந்த மற்றும் படையெழுச்சி செய்தவர்களாலும் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு படையெழுச்சி செய்தவர்கள் முன்னிருந்தவர்களுடன் பரஸ்பர விவாகஞ் செய்து கலந்து, இப்பொழுது இருப்பவர்களின் முன்னோர்களாயினர்.

கிறிஸ்துவுக்குமுன் 9ம் நூற்ருண்டிலுள்ள ஒரு உபநிஷத்தின்படி சுப்பிரமணியப்பெருமான் நாரத மகாமுனிவருக்கு ஞானுேபதேசம் செய்ததாகவும், அவரே, சனற்குமார முனிவராகவும் நிரூபிக்கப்பட்டிருககிறது. (சாந்தியோக்கிய உபநிஷதம் vii 262)

கந்தக் கடவுளின் பிரதிரூபம் (image) கிறிஸ்துவுக்குப் பின் 2ம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் அரசாண்ட கனுஷ்க (Hunshka) இராசாவின் நாணயத்தில் காணப்படுகின்றது இவ்வரசன் - மத்திய இமாசலம் யமுனை தொடங்கி பாக்றியாவும் ஒக்சஸ்நதிவரையும் உள்ள இடத்தை இராச்சியமாக ஆளுகைசெய்தான். (வின்சென் சிமித் என்பவர் எழுதிய இந்தியாவின் ஆதிசரித்திரம், பக்கம 271 பார்க்க.) (Vincent Smith Early History of India P. 271.)

3-ம் நூற்ருண்டில்: போஜராசன் காலத்தில் காளிதாச கவிஞர் எழுதிய சிறந்த சம்ஸ்கிருத இலக்கியம் "குமார சம்பவம்" அப் பெருமானுடைய பிறப்பைப் பற்றிக் கூறுகின்றது. அதே கவிஞர் எழுதிய "மேக தூதம்" என்ற நூலில் பாட்டுடைத் தலைவனுகியவன். சுதேசத்தினின்றும் அகற்றப்பட்டிருந்தான் அவன் தன் மனைவி துக்கித்திருப்பதை அறிந்து மேகத்தின் மூலமாய் தூதனுப்பும்பொழுது அதனை (அம் மேகத்தை) உச்சினி நகரத்திற்குச் சமீபமாயுள்ள தேவகிரி (Mt Devagiri) என்னும் மலையிலுள்ள கந்தப் பெருமான் கோயிலில் தங்கும்படி சொல்லியிருக்கிருன்.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

D. C. J.

வழக்கு இல: M B 11364

வயிரவன் செப்பன்
காரைதீவு வடக்கு யாழ்ப்பாணம்
—வழக்காளி

எதிராக

கந்தர் வேலுப்பிள்ளை
காரைதீவு வடக்கு
யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11346 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970 ஆம் ஞூ கார்த்திகை மீ 15-ம் திகதி (15-11-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1098-ம் 11-1-70 தொடக்கம் 18-6-70 வரைக்கும் ரூபா 900 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 309-82 ஏற்பட்ட செலவு ரூபா 208-92 சதம். முடிவான செலவு ரூபா 53-20 சதம். விகழ விருக்கும் செலவு ரூபா 47-25 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வடக்கு இறை மொத்திகாத்தான் புலம் நில பரப்பு 5 ஐந்து பனைகளும் வடலிகளும் வான் பயிர் செய் பயிர்களும் எல்லை கிழக்கு செல்வரத்தினம் பெண் இராணிக்கும் பரமு ஐயம்பிள்ளைக்குமுரியவாதனம். வடக்கு கந்தையா காசேக்திரனுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு இன ஒழுங்கை. எதிரியினால் கட்டப்பட்ட வீடுகள் உட்பட சொரியலாய் 2 பரப்பு (இரண்டு) அதைச் சேர்ந்தவைகளும்.

மா. முருகேசு, J.P.
கொம்மிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales, Valuer
"இந்திர பவனம்"
புங்குடுதீவு, 2-10-70.
எம். 347 6-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

1. ஆறுமுகம் கந்தையா பெண்
2. இராசபரமேஸ்வரி தெல்லிப்பளை மேற்கு, தற்போது இருக்கும் விலாசம்: A 5 அரசாங்க வீடு, திம்பிரிகசையா

வழ. இல: M. B. 11105 எதிராக —வழக்காளிகள்

1. கந்தையா கனகசபை, உடுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B 11105-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ கார்த்திகை மாதம் 27-ம் திகதி(27-11-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4764/-ம் 16-9-69 தொடக்கம் 1-6-70 வரைக்கும் ரூபாய் 3500/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 328-95ம் அறவிடப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "அரசோலை வன்னியப்பா பெருமாள்" வளவு பர. லில. இலா 2 V. C வீடும் செய் பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கையும், கந்தையா கைம்பெண் நாகமுத்துப்பிள்ளைக்குமுரிய ஆதனம், வடக்கு மேற்சொல்லப்பட்ட நாகமுத்துப்பிள்ளையின் ஆதனமும் ஒழுங்கையும் மேற்கு தியா சாமுவேலின் ஆதனமும் அமெரிக்கன் மிசனின் ஆதனமும். தெற்கு அமெரிக்கன் மிசனின் ஆதனம் இதடங்கலில் பிரிக்கப்படாத ½ பங்கு பதிவு இல: H 150/40

167/1, கோவில் வீதி,
கல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். 31-10-70

ப. நா. தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 346 6-11-70

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில் இல: 9733

1. பொன்னையா கந்தையா
2. பெண் நவரட்ணம்மா கரணவாய் வடக்கு,

எதிராக —வழக்காளிகள்

1 சின்னவன் கந்தன் 3. ஆண்வான் கந்தன்
2 சின்னவன் இளையவன் 4 பெண் நாகம்மா

இளையவனன் —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்விபரிக்கப்படுமாதனம் 1970-ம் ஞூ மார்கழி மீ 16-ம் திகதி (16-12-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி கடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் இளகாமகுறிச்சி "மந்திரகன்" நி. பா. 15 இதில் குறித்த பிசிகிடலுக்கு போடு அணைக்கப்பட்ட வடத்தில் 5ம் துண்டுக்கு நி. பா. 7 குளி 4. 10/32 எல்லை கிழக்கு V. கந்தர் முருகேசுவுக்குரிய ஆதனமும் மறு ஆதனமும் வடக்கு சின்னவன் இளையவனுக்குரிய ஆதனம். மேற்கு சின்னவன் இளையவனுக்கும் ஐயா கைம்பெண் நீனாட்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு தாமோதரம்பிள்ளை பெண் மீனாட்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் முழுவதும் தெரு பாவிப்புரித்தும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 4350/-

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | — ரூபா | 1916-66 |
| ரூபா 1250/-க்கு 10 வீத வட்டி 24-8-67 தொடக்கம் 20-1-68 வரை | | 51-06 |
| ரூபா 1967-72க்கு 5 வீதவட்டி 20-1-68 தொடக்கம் 23-9-70 வரை | | 34-31 |
| கோட்டுச் செலவு | | 204-90 |
| | மொத்தம் ரூபா | 2206-93 |
| முன் வரவு — 1250/- | — | 1250-00 |
| | மீதி ரூபா | 956-93 |

சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
15-10-70

கா. மூத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 343 6-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

1. சதாசிவம் கிருசித்தம்பி, மல்லாகம் —வழக்காளி

வழ: இல, M B 4581 எதிராக

1 நன்னித்தம்பி நடராஜா, இணுவில். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 4581 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் காணியை 1970-ம் ஞூ மார்கழி மாதம் 4-ந் திகதி (4-12-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1355-55 சதமும் 1-12-62 தொடக்கம் 3-5-70 வரைக்கும் ரூபா 1000/-த்திற்கு 10% வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 420-49 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று இணுவிலைச் சேர்ந்த "மாதகரைவளவு" என்றழைக்கப்படும், 4 பரப்பிலும் வான்பயிர்களும் செய்பயிர்களும் வழிவாய்க்கால்களும் காணியின் தெற்குப்பக்கமாகவுள்ள கிணற்றின் தண்ணீர்ப் பங்கும் இவ்வாதனத்தின் எல்லைகள்: கிழக்கு கந்தர் சின்னத்துரையின் ஆதனம். வடக்கு சிவப்பிரகாசத்தின் மனைவி அம்பிகாதேவியின் ஆதனம், மேற்கு நன்னித்தம்பி சண்முகநாதனின் ஆதனம், தெற்கு நன்னித்தம்பி பாலசுப்பிரமணியத்தின் ஆதனம்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன் துறை வீதி,
கோண்டாவில். 19-10-70

சி. ஆ. த. வடிவேலு. J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம். 334 6—11—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இளவாலை, மாரிசன்கூடல்.

1. பாவிலுப்பிள்ளை யோசெவ் இம்மானுவல்
2. பெண் மேரியம்மா

இல: M B 10023 —வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம், சிம் குறுக்குத்தெரு இல: 40/1, வீ கே. சுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியலட்சுமி காலஞ்சென்ற வி. கே. சுப்பிரமணியத்தின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்.
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B 10023-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஞூ நவம்பர் (கார்த்திகை) மீ 30-ம் திகதி (30-11-70) திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3320/-ம், இதில் ரூபாய் 2000/-க்கு 31-5-68 திகதி தொடக்கம் 16-1-70 திகதி வரைக்கும் 100க்கு 12% வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 498-33 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு கிழக்கிறை "ஆவுரங்காடும் ஆவுரங்காட்டுக்கு மேற்குப் பிரிவுகளும்" விலப்பரப்பு எழுபதும் (70) வான்பயிர்களும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் செல்லத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ரோட்டு; தெற்கு அண்ணாமலை கணபதிப்பிள்ளையின் ஆதனம், இதில் சொரியலாய் ஆறில் ஒரு பங்கு (1/6) அதற்குரியவைகளும்.

தெல்லிப்பழை, 18-10-70

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner & Valuer
எம் 345 (6-10-70).

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: 3713

சாவகச்சேரி
டிஸ்திரிக் கோட்டில்

எழுதுமட்டுவாள் தெற்கு
கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
— வழக்காளி

எதிராக

1. பளை கச்சாய்வெளி குமாரசாமி ஐயர் பஞ்சாட்சர சர்மா தனக்காகவும் தனது பராயமற்ற மகள் 2. பஞ்சாட்சரசர்மா மகள் பத்மாவதி அம்மாவுக்காகவும்.
— எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டு 3713-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனங்கள் 1970-ஆம் ஞூ மார்கழி மீ 23-ம் திகதி (23-12-70) புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவ்வக காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 1210/-ம் 25-2-69 தொடக்கம் 1-9-69 வரையும் ரூபா 1000/-த்துக்கு 12 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும்வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 289/12½

### ஆதன விபரம்

1-ம் ஆதனம் வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் பச்சிலைப்பளிப் பகுதி புலோப்பளைக் கோவிற்பற்று பெரியபளை யிறை "கண்டையடி" நீ பர, 16 குளி 6. இதில் தெற்குப் பக்கமாக வி, பர. 8. குளி 6. ஷை "காண்டையடி" வி பர 7 குளி 12 இருவகைக்கும் நீ பர 16 பதினாறு எல்லை கிழக்கு தாமோதரம்பிள்ளை வன்னியசிங்கத்துக்குரியவாதனம், வடக்கு வீரகத்தி [illegible]முரியவாதனம். மேற்கு தாமோதரம்பிள்ளை வன்னியசிங்கத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு கச்சாய் வெளியிற் பிள்ளையார்கோவிலுக்குரியவாதனம். இவ் வெல்லைகுட் சேர்ந்தவைகளனைத்திலும் இதற் கூடாகப் போகும் ரோட்டுக்கு எடுபட்ட நிலம் நீக்கி மிகுதியடங்கலிலும் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளனைத்தும்

2-ம் ஆதனம் ஷை தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாள் கோவிற்பற்றுஎழுதுமட்டுவாள்தெற்கிறை "சங்கத்தார் காடு பனை இரு பிரிவுகளும் அருகு சங்கத்தார் காடு பனையும் குடியிருப்பும் நில பர 10, இதில் தெற்குப் பக்கமாக வி, பர. 5 ஐந்துக் கெல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு கந்தையா சின்னத்தம்பிக்குரியவாதனம் மேற்கு கந்தையா இராசையாவுக்குரியவாதனம்; தெற்கு சின்னத்தம்பி சின்னையாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், இவ் வெல்லைக்குட் சேர்ந்த நிலம் அடங்கலு மதைச்சேர்ந்தவைகளனைத்தும்.

மூ. நா. மார்க்கண்டு,
கொமிசனர்,
சாவகச்சேரி, 13-11-1970.
எம். 348 6-11-70

## பிழை திருத்தம்

30-10-70 இந்து சாதனத்தில் வெளிவந்த M B 11165 இலக்க வழக்கில் 11-10-6 தொடக்கம் என்பதை 11-10-69 என்றும், ரூபா 300/- என்பதை ரூபா 3000/- என்றும், ஆதன விபரத்தில் 2 (Lms V. C.) என்பதை நிலப்பரப்பு 22 (Lms. V. C) என்றும் வாசிக்கவும்.

x x x

சென்ற 30-10-70 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் M. B. 8947-ம் இலக்கமுடையகோட்டு விற்பனவு விளம்பரத்தில் எதிராளிகள் என்ற பகுதியில் உடுவிலைச் சேர்ந்த 1. பொன்னம்பலம் நாகலட்சுமியும் என்றிருப்பதை உடுவிலைசேர்ந்த 1. பொன்னம்பலம் நாகலிங்கமும் 2. பெண் நாகலட்சுமியும் — எதிராளிகள் என திருத்தி வாசிக்குக.

## ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ்ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை தாமதமின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டில்

மட்டுவில் வடக்கு, பொன்னையா தாமோதரம்பிள்ளை

இல: 3727 எதிராக —வழக்காளி

மட்டுவில் வடக்கு, சரவணமுத்து இராமலிங்கம் – எதிராளி

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டின் 3727ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனங்கள், அவ்வக் காணிகளுக்குள் நின்று 1970ம் ஞூ மார்கழி மீ 30-ம் திகதி (30—12—70) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 24350/- 14-4-69 தொடக்கம் 16-9-69 வரைக்கும் ரூபா 15,000/- 8 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 484-40 சதம் இதில் செலவு வகையால் கொடுபட்ட ரூபா 200/- மிகுதி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் வடக்கிறை 'கயிலனத்தாய் குடியிருப்பு நி. பா. 6 குழி 16½ இதில் கிழக்கு பக்கமாக நி. பா, 3 குழி 8¼ இதில் ரோட்டுக்கு தெற்குப் பக்கமாக நி. பா. 3 மூன்றுக்கெல்லை கிழக்கு இராமலிங்கம் அருணாசலத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு ரோட்டு, மேற்கு சரவணமுத்து இராமலிங்கத்துக்குரியவாதனம் தெற்கு சின்னத்தம்பி கிசுவருக்குரியவாதனம், இவ்வெல்லைக்குட் சேர்ந்தவைகளடங்கலும் அதைச்சேர்ந்தவைகளனைத்திலும் சொரியலாக அரைவாசியும் கல்வீடு முழுவதும் பதிவு F 282/148

2-ம் ஆதனம்: ஷை இறை 'கயிலனத்தாய் குடியிருப்பு' நி. பா. 6 குழி 16½ இதில் மேற்குப் பக்கமாக அரைவாசிக்கு நி. பா. 3 குழி 8¼ இதில் ரோட்டுக்குத் தெற்குப் பக்கமாக நி. பா. (2¾) இரண்டே முக்காலுக்கெல்லை கிழக்கு முற்கூறிய 1-ம் ஆதனம், வடக்கு ரோட்டு மேற்கும் தெற்கும் சின்னத்தம்பி கிசுவருக்குரியவாதனம் இதடங்கலும் பதிவு F. 289/191

சாவகச்சேரி.
13-11-70

மூ. நா. மார்க்கண்டு
கொமிஷனர்
எம். 349 6—11—70

## திருக்கேதீஸ்வரம் புகைவண்டி யாத்திரீகர் தொண்டர் சபை

13-11-70 வெள்ளிக்கிழமை நண்பகல் வரும் சுபவேளையில் திருக்கேதீச்சரம் புகைவண்டித்தரிப்பிற்கு அண்மையிலுள்ள சபையின் நிலத்தில் ஷ சபையின் மடத்திற்கு அத்திவாரக்கல் நாட்டும் வைபவம் நிகழத் திருவருள் கூட்டி வைத்திருக்கிறது. (ந. கி.

## கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சை

இவ்வாண்டு ஷ பரீட்சை டிசம்பர் 11-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதி வரையும் 2500 இடங்களில் நடைபெறும். 3, 1/2 இலட்சம் பிள்ளைகள் பரீட்சை எடுப்பார்கள். வித்தியாபகுதி வேண்டிய பந்தோபஸ்துகளை போலிசாருடைய உதவியுடன் எடுக்கத் தீர்மானித்துள்ளது.

## சனத்தொகை மதிப்பு

1971-ம் ஆண்டில் சனத்தொகை மதிப்பெடுப்பதற்குரிய வேலைகளை மந்திரி சபை இம்மாதம் ஆரம்பிக்கயிருக்கின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இல: M. B. 10653

இணுவில், நாகன் சங்கரன் —வழக்காளி
எதிராக
இணுவில், முருகன் பரமசாமி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10653 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஞு மார்கழி மாதம் 4ம் திகதி (4 12—70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1627-77 சதம் இதில் ரூபா 1000/-க்கும் 1-3-69 தொடக்கம் 11-10-69 வரைக்கும் 100க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 249-11 சதம் செலவழித்த செலவு ரூபா 168-12 வெளியாத்துச் செலவு ரூபா 43-37 எதிர்வரும் செலவு 37-62

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை 'முத்தியா' பர. நில (9) ஒன்பது இதில் கிழக்குப் பக்கமாக விற்றவகையில் ½ பரப்பு பிற நீங்கல் இதன் மிகுதியில் வடக்குப் பக்கமாக விற்ற வகையில் பர. நி, இலா. 4½ பிற நீங்கல் இவ்மிகுதி ஆதனம், பர. நி. இலா. 4½ல் கிழக்குப்பக்கம் சீதனம்கொடுத்தவகையில் பர நி, இலா. 2ல் பிறநீங்கல் மிகுதி பர. நி. இலா. (2½) இரண்டேகாலும் கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் ½ வாசிப் பங்கும் பனைகளும், வடலிகளும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு வேலன் தம்பிப்பிள்ளை பெண் பூரணத்தினுதனம், வடக்கு கந்தன் அரிகுட்டி பெண் பொன்னிமினுதனம். மேற்கு நாகன் சங்கரனின் ஆதனம், தெற்கு தம்பிப்பிள்ளை பெண் பூரணத்தினுதனம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

க. சுப்பிரமணியம்
நம: 24, 1-ம்குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 29-10-70 M. 354 6-11-70

## கோட்டு விறபனவு விளமபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரம்பனில் இருப்பவர்களும் தற்போது 111ம் இலக்கம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுமாகிய
1. சரவணமுத்து கல்லநாதனும்
2. மனைவி மங்கையற்கரசியும் —வழக்காளிகள்

வழ: இல. M, B. 10882 எதிராக

தனது சொந்தமும், இறந்துபோனவரின் சொத்துகளின் பிரதிநிதியுமாகிய,
1. கஸ்பற இராஜதுரையும்
2, காலம்சென்ற லூர்த்துவும், சரவணை மேற்கு, வேலணை. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில MB 10882ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1970 -ம் ஞு கார்த்திகை மீ 20-ம் திகதி [20-11-70] வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6650/- மேற்கொண்டு வட்டி ரூபா 5500/-க்கும் வழக்கு வைத்த திகதி 12-6-1969 தொடக்கம 24-3-1970 வரை 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 471-40 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஊர்காவற்துறைப் பிரிவு ஊர்காவற்துறைக் கோவிற்பற்று சரவணை 'அந்திராமொன்கணைப்புலம்'' என்றழைக்கப்படும் வயல்காணி 55 பரப்பில் மேற்குப் புறமாக 18 பரப்பு இதற்கு கிழக்கு எல்லையில் உள்ள கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்பும், தூர்வைப் பங்கும் எல்லை கிழக்கு பிரகாசம்வலத்தீஸ் அல்லது பொன்னையாவும் அவரின் மனைவி மேரி இராணியினதும் மேறியன் குறூசு அவரின் மனைவி திறிசம்மாவினதும் ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு வைத்தியநாதர் பாலசிங்கத்தின் ஆதனம், தெற்கு வைத்தியநாதர் செல்லையாவின் ஆதனம். இதனடங்கிலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

"வடிவேல் உதயம்'' சி. ஆ. த. வடிவேலு, J. P.
காங்கேசன்துறை வீதி, கொமிஷனரும், விலை மதிப்பாளரும்
கோண்டாவில், ஏலவிற்பனையாளரும்:
2-11-70. எம். 358 6—11—70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 6—11—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

## நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10625
புலோலி மேற்கு, வேலாயுதர் அல்லது வேதவனம் கணபதிப்பிள்ளை வழக்காளி
எதிராக
கெருடாவில், அருளம்பலம் முத்துராசா —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970-ம் ஆண்டு மார்கழி மீ 19-ம திகதி (19-12-70) சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று

1. உடுப்பிட்டி இறை பட்டாவளை தோட்டம் 2, ஷ நிலப்பரப்பு 2½ ஷ நிலப்பரப்பு 1 இப் பிரிவுகளில் கிழக்கரை வாசித்த நிலப்பரப்பு 3 குளி 1½ எல்லை கிழக்கு ஆறுமுகம் செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு மயில்வாகனம் மைமெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் மேற்கு கீழே சொல்லப்படும் 2ம் ஆதனம், தெற்கு தெரு, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் 1/3ல் 2/3 பங்கும்.

2, ஷ இறை பட்டாவளை தோட்டம் 2, ஷ நிலப்பரப்பு 2½ ஷ நிலப்பரப்பு 1 இப்பிரிவுகளில் மேற்கரை வாசிக்கு நிலப்பரப்பு 3 குளி 1, 1/2 எல்லை கிழக்கு மேற்சொல்லிய 1-ம் காணி வடக்கு மயில்வாகனம் மைமெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு தம்பையா முத்துத்தம்பிக்கும் பெண் மீனாட்சிக்குமுடைய வாதனம், தெற்கு தெரு இதில் நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் 1/3 ல் 2/3 பங்கும.

3. கெருடாவிற் குறிச்சிமிறை மிலாவில்வயல் நிலப்பரப்பு 33 எல்லை கிழக்கு செல்லையா ஐயர் சிவலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கும் மேற்கும் எதிரிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு கதிரவேலு பெண் அன்னபூரணத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலிற் சொரியலாய் 1/26 பங்கும,

4, ஷ இறை சாளைப்புலம் மேட்சு 38 எல்லை கிழக்கும, வடக்கும் முத்து பொன்னமபலத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு தம்பர் சிற்றம்பலத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு தெரு இவ் வெல்லைக்குட்டவையடங்கலிற் சொரியலாய் அரைவாசியில் 3/8 பங்கும்.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: ரூ | 3520-00 |
| ரூ: 2000/-க்கு 15-9-69 தொடக்கம் 3-3-70 வரை 8 வீத வட்டி | 46-66 |
| ரூ. 2046-66க்கு 3-3-70 தொடக்கம் 3-10-70வரை 5 வீத வட்டி | 59-68 |
| செலவு ரூபா | 252-07 |
| மொத்தம் ரூபா | 3878-41 |

V. M கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
22-10-70 எம். 350 6-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா நல்லூர், —வழக்காளி
இல: M: B. 10515 எதிராக
செல்லையா நவரத்தினம் நல்லூர், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10515ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு மார்கழி மீ 6-ம் திகதி (6-12-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4723/-ம், 3-1-1969 தொடக்கம் 2-3-1970 வரைக்கும் ரூபாய் 3700/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 431 சதம் 39

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிசனும் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'மன்மதராயன் வளவு' பரப்பு நிலம் இலா. 3ம, குழி 1½ம கல் வீடும், கிணறும், பயிர்களும் எல்லை கிழக்கு: முத்துமாரியம்மன் கோவிலின் ஆதனம் வடக்கு தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா மேல் குறிக்கப்பட்ட வழக்காளியின் ஆதனம். மேற்கு: ஒழுங்கையும் அருணாசலம் கைம்பெண் தங்கத்துடையதும் பங்காளிகளின் உடையதும் இயாகராசா பெண் கமலம் உடையதும் ஆதனம், தெற்கு சண்முகராசா உடையதும் கந்தையா பெண் மங்கையர்க்கரசி உடைய ஆதனங்கள். இதடங்கலும இக் காணிக்கு மேற்கெல்லை பக்கமாய் கோவில் றோட்டுக்கு போவதற்கு விடுபட்ட ஒழுங்கையின் போய்வர பாவிப்புரிமையும் பிற நீங்கலாக, பதிவு இல: யாழ்ப்பாண காணிக் கந்தோர் D. 324/43

107, பெரியதெரு, எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்தீஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
1-11-70 எம். 356 6—11—70

## கோட்டு விற்பனவு விளமபரம்

காரைதீவு மேற்கு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் —வழக்காளி
வழ: இல M. B. 11048 எதிராக
காரைதீவு மேற்கு ஆறுமுகம் குமரேசு எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11048-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுகாணி 1970-ம் ஞு மார்கழி மீ 6-ஆம் திகதி (6-12-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3447/- இதில் ரூபா 2000/-க்கும் 19-8-69 தொடக்கம் 4-3-70 வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 305-75 செலவழித்த செலவு ரூபா 194-80 வெலியாத்துச் செலவு ரூபா 60—25 எதிர் வரும் செலவு ரூபா 50-70.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று காரைதீவு மேற்கிறை "நொச்சிக் குளி" பர நில (15) பதினைந்தும் பனைகளும் வடலிகளும் செய்பயிர்களும் வீடுகளும் கிணறும் எல்லை கிழக்கு கந்தையா இராமநாதருக்கும் வேலாயுதர் சின்னத்துரைக்கும் கந்தையா ஆறுமுகத்துக்குமுரிய ஆதனங்கள், வடக்கு கந்தையா சங்கரப்பிள்ளைக்கும் கந்தையா ஆறுமுகத்துக்குமுரிய ஆதனங்கள். மேற்கு பொன்னம்பலம் ஆறுமுகத்துக்கும் சுப்பர் வேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் வேலாயுதர் சின்னத்துரைக்குமுரிய ஆதனங்கள். இதில் மேற்கு எல்லையிலிருக்கும் சுப்பர் வேலுப்பிள்ளையின் காணியில் கிழக்கெல்லையருகாக பெரிய ஒழுங்கையில் சந்திப்பதற்கு (8) எட்டு முழ அகலம் கொண்ட ஒழுங்கையின் வழிப் பாவிப்புரித்தும இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும். அதைச் சேர்ந்தவைகளும்.

இல. 24, முதலாம்குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம். 30-10-70, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 351 6-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை கிழக்கு (1) முருகுப்பிள்ளை சண்முகதாஸம் (2) பெண் இராசலட்சுமியும் —வழக்காளிகள்
இல. M B. 11081 எதிராக
வட்டுக்கோட்டை கிழக்கு கந்தர் வீரசிங்கம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11081-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஆ மார்கழி (டிசம்பர்)மீ 2-ம் திகதி (2-12-70) புதன்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: மூதல் வட்டி ரூபா 1339-50 இதில் ரூபா 1000/— க்கும் 30-8-69 தொடக்கம் 30-4-70 வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 362-56. செலவழித்த செலவு ரூபா 210-37 வெலியாத்துச்செலவு ரூபா 78-57 எதிர்வரும் செலவு ரூபா 73-62.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை விந்தைசிட்டி பர நில (5) ஐந்தும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு வயித்திலிங்கம் பெண் இராசம்மாவினுதனம். வடக்கு முருகன் சடையனின் ஆதனம். மேற்கு அப்பையா பெண் மூத்தாபரணதினுதனம். தெற்கு ஒழுங்கை மூகப்பும். அருளம்பலம் கைப்பெண் இரத்தினத்தினுதனமும். இதடங்கலில் வடகெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் மேற்கெல்லையருகாக இவ்வுறுதி முடிப்புத் திகதியிலிருந்து (2-11-63) இரண்டு வருஷம் வரைக்கும் தண்ணீர் அள்ளப்பாவிப்புரித்தும் . மேற்கெல்லை வேலியருகாக தெற்கு ஒழுங்கையிலிருந்து வடக்கெல்லைக் காணிகளுக்கு ஆறுமுழ அகலம் கொண்ட வழிப்பாவிப்புரித்து நிலமும் பிற நீங்கல்

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம், 30-10-70. கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 353 6-11-70